**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்’: மக்கள் குறை தீர்க்க புதிய திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, நவ. 23:** தமிழக மக்களின் குறைகளைத் தீர்க்க புதிய முன்னெடுப்பாக, ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ எனும் திட்டம் டிசம்பர் மாதம் தொடங்கப்படவுள்ளது. இதற்கான அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை வெளியிட்டார்.



அவர் வெளியிட்ட அறிவிப்பு: மாவட்டங்களில் ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமைதோறும் பொதுமக்களின் குறைதீர் கூட்டம் நடத்தப்படுகிறது. இந்தக் கூட்டங்களுக்கு வருகின்ற பொது மக்கள் மாவட்ட ஆட்சியர்களிடம் நேரில் மனு அளிக்கின்றனர். அந்த மனுக்களுக்கு ஆட்சியர்கள் தீர்வு கண்டு வருகின்றனர். இது ஒருபுறமிருக்க, பல்வேறு துறைகளால் வழங்கப்படும் சேவைகள் மக்களுக்கு முறையாகக் கிடைக்கின்றனவா என்பதை ஆய்வு செய்ய நானே நேரடியாக களத்தில் இறங்கி பணியாற்றி வருகிறேன்.

அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு, கள அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தையும் நடத்தி, உரிய அறிவுரைகளை வழங்கவே கொண்டு வரப்பட்ட திட்டம் தான், களத்தில் முதல்வர் திட்டம்.

**புதிய முன்னெடுப்பு:** மக்களின் குறைகளைத் தீர்க்கும் இது போன்ற திட்டங்களின் தொடர்ச்சியாக, இப்போது மேலும் புதிய திட்டத்தை தமிழக அரசு முன்னெடுத்துள்ளது. அதன்படி, ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ எனும் திட்டம் டிசம்பர் மாதம் தொடங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்ட அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபடுவர். அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும் தங்கு தடையின்றி மக்களுக்குச் சென்று சேர்வதை, ‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்’ எனும் திட்டம் மூலம் உறுதி செய்வார்கள்.

இந்தத் திட்டம் களத்தில் முதல்வர் திட்டத்தின் அடுத்தகட்டம் எனலாம். உங்களை நாடி உங்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் வருகிறது. நானும் அரசு இயந்திரமும் களத்துக்கு வருகிறோம். கவனமுடன் உங்கள் குறை கேட்போம். களத்திலேயே தீர்வு காண்போம் என்று அந்த அறிவிப்பில் தெரிவித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

Activate Windows
Go to Settings to activate W

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# அதிகரிக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வு!


கோ. விசுவநாதன்

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியைப் பொருத்துதான் இருக்கும். சில நாடுகள் ஏற்கெனவே பெரிய அளவில் வளர்ந்து விட்டன. பல நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன.

உலகில் உள்ள நாடுகளில் சுமார் 70 நாடுகள் பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளாக கருதப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சி என்பது தனிநபர் வருமானத்தை வைத்துத்தான் கணக்கிடப்படுகிறது. தனிநபர் வருமானம் 15,000 டாலர்கள் உள்ள நாடுகளை வளர்ந்த நாடுகள் என்று அழைக்கிறோம். மீதமுள்ள நாடுகளை வளரும் நாடுகள், வளர்ச்சி பெறாத நாடுகள் என்று இருவகையாக நாம் பிரித்து வைத்திருக்கிறோம்.

அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நான்கு நாடுகள் மட்டுமே உலகில் பெரிய பொருளாதார நாடுகளாக கருதப்படுகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) அளவீட்டை வைத்துத்தான் தன்னிறைவு பெற்ற நாடு, வளர்ந்த நாடு, வளருகின்ற நாடுகள் என்று எல்லாம் அடையாளப்படுத்தப்படுகின்றன.

2023-இல் அமெரிக்காவின் மொத்த உற்பத்தி 26 டிரில்லியன் டாலர், சீனா 19 டிரில்லியன் டாலர், ஜெர்மன் 4.4 டிரில்லியன் டாலர், ஜப்பான் 4.2 டிரில்லியன் டாலர். இந்தியாவில் மொத்த உற்பத்தி 3.7 டிரில்லியன் டாலர். நவம்பர் மாதம் 4 டிரில்லியனாக அது உயர்ந்துள்ளதாக தகவல். நாம் ஐந்தாவது இடத்தில் இருக்கிறோம்.

உலக நாடுகள் மொத்தம் 193. அதில் நாம் ஐந்தாவது இடத்தில் மொத்த உற்பத்தியில் இருக்கிறோம் என்பது நிச்சயம் மகிழ்ச்சியான விஷயம்தான். முதலில் நாம் ஏழாவது இடத்தில் இருந்தோம். இப்போது பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் இரண்டு நாடுகளையும் பின்னுக்குத் தள்ளி ஐந்தாவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறோம்.

அதேசமயம் தனிநபர் வருமானத்தில் நாம் மிகவும் பின்தங்கி இருக்கிறோம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவின் தனிநபர் வருமானம் 2,600 டாலர். மற்ற நாடுகளுடன் இதை ஒப்பிடும்போது நாம் 139-ஆவது இடத்தில் இருக்கிறோம்.

மக்கள்தொகையில் நம்முடன் போட்டி போடும் ஒரே நாடு சீனா மட்டும்தான். சீனாவின் புதிய பொருளாதாரக் கொள்கை 1978-79-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. நம் நாட்டில் 1991-இல் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றைய பிரதமர் நரசிம்ம ராவ் மற்றும் நிதியமைச்சர் மன்மோகன் சிங் இருவர்தான் இதற்கு காரணம். நம் நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்டது இந்த புதிய பொருளாதாரக் கொள்கைதான் என்று சொல்லலாம்.

1980-இல் இந்தியா, சீனா இரண்டு நாடுகளுமே பொருளாதார ரீதியாக ஒரே நிலையில்தான் இருந்தோம். அப்போது இந்தியாவின் தனி நபர் வருமானம் 224 டாலர். சீனாவின் தனிநபர் வருமானம் 243 டாலராக இருந்தது. கடந்த 42 ஆண்டுகளில் இந்தியா, சீனா இரண்டுமே வளர்ந்து இருக்கின்றன என்பதும் உண்மை. அதே சமயம், சீனாவுடன் ஒப்பிடும்போது நாம் வளர்ச்சியில் பின்தங்கிதான் இருக்கிறோம். 1980-ல் சீனாவுக்கும் நமக்கும் தனிநபர் வருமானத்தில் வித்தியாசம் வெறும் 19 டாலராக இருந்தது. இப்போது அந்த வித்தியாசம் 10,000 டாலரை தாண்டி விட்டது. இதற்கு முக்கிய காரணம் சீனாவின் கல்வி வளர்ச்சியும் தொழில் வளர்ச்சியும்தான்.

இந்தியாவில் உயர் கல்வி பெறுவோர் எண்ணிக்கை 27% மட்டுமே. இதை Gross Enrolment Ratio (GER) என்று குறிப்பிடுவார்கள். இந்தியா வளர்ந்த நாடாக அங்கீகாரம் பெற உயர்கல்வி மிக அவசியம். ஆனால் உயர்கல்வியில் நாம் பின்தங்கிதான் இருக்கிறோம். அதே சமயம் சீனாவில் உயர் கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 60%. சீனாவின் வளர்ச்சிக்கு இது ஒரு முக்கிய காரணம்.

**2021-இல் இந்தியர்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.2.04 லட்சம். ஆனால், கடைநிலையில் இருக்கும் 50% மக்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.53,000; ஆனால், மேல்தளத்தில் உள்ள 10% மக்களின் வருமானம் ரூ.11.66 லட்சம்; அதாவது, கடைநிலையில் உள்ளவர்களைவிட 20 மடங்கு அதிகம்.**

அதனால்தான் தொழில் உற்பத்தியில் உலக நாடுகள் எல்லாவற்றையும் பின்னுக்கு தள்ளிவிட்டு சீனா முதல் இடத்தில் இருக்கிறது. 1980-இல் உலக உற்பத்தியில் சீனாவின் பங்களிப்பு மூன்று சதவீதமாக இருந்தது. இப்போது 30%-ஆக அது உயர்ந்து இருக்கிறது. அமெரிக்காவைப் பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடத்தை எட்டி இருக்கிறது சீனா. உலக உற்பத்தியில் இந்தியாவின் தற்போதைய பங்களிப்பு மூன்று சதவீதம்தான்.

சீனாவின் கட்டுப்பாடு, அரசு அளிக்கும் சலுகைகள், மக்களின் கடின உழைப்பு, ஏற்றுமதிக்கு அந்த நாடு தரும் முக்கியத்துவம் ஆகியவை சீனாவின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம். விவசாயத்தை மட்டுமே நம்பி இருந்த சீனா இன்று உலகின் உற்பத்தி மையம் என்ற நிலைக்கு உயர்ந்து விட்டது. இதை ஓர் அசாதாரண வளர்ச்சியாகத்தான் உலக நாடுகள் பார்க்கின்றன.

ஒரு நாட்டின் வளர்ச்சியின் பலன் எல்லா மக்களையும் போய் சேர வேண்டும். ஆனால் நம் நாட்டில் அவ்வாறு நடைபெறுவதில்லை. வசதியானவர்கள் மேலும் வசதிகளைப் பெறுகிறார்கள். ஆனால் ஏழைகளுக்கு கடைசி வரை எதுவுமே கிட்டவில்லை.

எடுத்துக்காட்டாக சொல்ல வேண்டுமென்றால், கரோனா நோய்த்தொற்று காலத்தில் இந்தியாவில் பொது முடக்கம் அமலில் இருந்தது. இதனால் பலருக்கு வேலை போனது; ஊதியம் கிடைக்கவில்லை; வருமானம் குறைந்தது; கொஞ்சம் பேருக்கு வருமானமே இல்லை என்ற நிலை ஏற்பட்டது. ஆனால், அந்த ஆண்டு அதாவது, 2021-இல் இரண்டு தொழிலதிபர்களுக்கு மட்டும் நான்கு லட்சம் கோடி வருமானம் கிடைத்திருக்கிறது.

2000-ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்த பெரும் கோடீஸ்வரர்கள் அதாவது பில்லியனர்கள் ஒன்பது பேர்தான். 2022-இல் அந்த எண்ணிக்கை 166-ஆக உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம் என்ன? நமது பொருளாதாரக் கொள்கையில் உள்ள ஏற்றத்தாழ்வு குறைபாடுகள்தான். ஏற்கெனவே ஜாதி, மதம் காரணமாக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்தியாவில், நமது பொருளாதாரக் கொள்கை காரணமாக இப்போது மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு நம்மைப் பிரிக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வு நமது எதிர்கால வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்காது.

நம்முடைய மொத்த மக்கள்தொகை 140 கோடி. இதில் மேல் தளத்தில் உள்ள 10 சதவீதம் பேர் இந்த நாட்டில் 80% சொத்துகளை வைத்திருக்கிறார்கள். கடைநிலையில் உள்ள 50% மக்கள் ஆறு சதவீதம் சொத்துகளைத்தான் வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் மொத்த சொத்தில் ஒரு சதவீதம் பேரிடம் 37% சொத்து இருக்கிறது. இந்தியாவில் ஒரு சதவீதம் பேரிடம் 58% சொத்து இருக்கிறது. அமெரிக்காவை விட இந்தியாவில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிறைய இருக்கின்றன என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவையில்லை.

அரசின் வரிச் சலுகைகள் மேல்தளத்தில் உள்ளவர்களுக்குத்தான் வழங்கப்படுகின்றன. அதே சமயம் இந்தியாவின் மொத்த வரியில் 50%-க்கும் அதிகமாக கடைநிலையில் உள்ளவர்கள்தான் (64%) செலுத்துகின்றனர். ஜிஎஸ்டி (சரக்கு மற்றும் சேவை வரி). ஜிஎஸ்டி வரி வருவாய்தான் மத்திய அரசுக்கு அதிக வருமானத்தை ஈட்டி தருகிறது என்பதை மத்திய அரசே புள்ளிவிவரம் மூலம் ஒப்புக்கொள்கிறது.

அது மட்டும் இல்லை. மாதத்துக்கு மாதம் ஜிஎஸ்டி வரி வருவாய் அதிகரித்துக் கொண்டு இருக்கிறதே தவிர குறைவதில்லை. இதையும் மத்திய அரசுதான் சொல்கிறது.

இந்த ஜிஎஸ்டி வரி வருவாயில் மேல்தளத்தில் உள்ளவர்கள் பங்களிப்பு வெறும் 4% மட்டுமே. உலகில் உள்ள பல நாடுகளுடன் நமது நாட்டின் வரி விதிப்பு முறையை ஒப்பிட்டுக்கூட பார்க்க முடியாது. அவ்வளவு முரண்பாடுகள்.

2021-இல் இந்தியர்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.2.04 லட்சம். ஆனால், கடைநிலையில் இருக்கும் 50% மக்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.53,000; ஆனால், மேல்தளத்தில் உள்ள 10% மக்களின் வருமானம் ரூ.11.66 லட்சம்; அதாவது, கடைநிலையில் உள்ளவர்களைவிட 20 மடங்கு அதிகம். எனவே, தனிநபர் வருமானத்துக்கான அளவீடு. அதன் கணக்கீடு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஒருவேளை தவறான கணக்கீடோ என்ற சந்தேகம் வருகிறது. இந்த ஏற்றத்தாழ்வு தான் நமது நாட்டின் மொத்த வளர்ச்சியையும் பாதிக்கிறது.

ஏழை மக்களுக்கு எப்போதும் பொருளாதார தேவை தொடர்ந்து இருந்து கொண்டுதான் வருகிறது. ஆனால், இந்தத் தேவையை அவர்கள் பூர்த்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பு, அதற்கான வழியை அவர்களுக்கு முழுமையாக கிடைப்பதற்கு நாம் என்ன செய்தோம் என்ற கேள்வி தொடர்ந்து வந்து கொண்டு தான் இருக்கிறது.

இதற்கு அரசின் பொருளாதாரக் கொள்கையில் புரட்சிகரமான மாறுதல்கள் தேவை. பரந்த தோள்களில்தான் அதிக சுமை இருக்க வேண்டும் என்பது வரிவிதிப்பில் பொதுவான ஒரு நியதி. அந்த நியதியை நாம் வரிவிதிப்பதில் பின்பற்றுவதில்லை. இதுதான் இந்தக் கோளாறுக்கு முக்கிய காரணம்.

நாம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேகமாக வளர வேண்டும். அப்போது தான் வளர்ந்த நாடாக இந்தியா அடையாளப்படுத்தப்படும். இதற்கு அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் தராமல் மத்திய - மாநில அரசுகளின் செயல்பாடுகள், பொருளாதார வளர்ச்சி என்ற நோக்கில் இருக்க வேண்டும். கொள்கை வகுப்பதிலும் அதை அமல்படுத்துவதிலும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே இது சாத்தியம்.

கட்டுரையாளர்:
**வேந்தர் – விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.**

# மாற்றில் தேவை மாற்றம்!

உறுப்பு தானம் குறித்த ஆய்வு ஒன்று சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. 'எக்ஸ்பிரிமெண்ட்டல் அண்ட் கிளினிக்கல் டிரான்ஸ்பிளான்டேஷன் ஜர்னல்' என்பது உறுப்பு தானம், உறுப்பு தான மாற்று சிகிச்சை குறித்த விவரங்களுக்காகவே வெளியாகும் மருத்துவ இதழ். அந்த இதழில் வெளியாகி இருக்கும் ஆய்வுக் கட்டுரை, உறுப்பு தானம் குறித்து மீண்டும் விவாதத்தை எழுப்பியிருக்கிறது.

1995 முதல் 2020 வரையிலான கால் நூற்றாண்டுகால உறுப்பு தானம் குறித்த புள்ளிவிவரம் அந்த ஆய்வுக் கட்டுரையில் தரப்பட்டிருக்கிறது. அதன்படி, இந்தியாவில் நான்கு ஆண்களுக்கு உறுப்பு தான சிகிச்சை நடைபெறும்போது, உறுப்பு தானம் பெறும் பெண் நோயாளியின் எண்ணிக்கை ஒன்று மட்டுமே. மொத்தம் நடைபெற்ற 36,640 உறுப்பு மாற்று சிகிச்சைகளால் பயனடைந்தவர்களில் 29,000-க்கும் அதிகமானவர்கள் ஆண்கள். பெண்களின் எண்ணிக்கை வெறும் 6,940 மட்டுமே.

உறுப்பு தானம் வழங்கிய உயிரிழந்த ஆண் நன்கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், உயிரோடு வாழும் உறுப்பு தான நன்கொடையாளர்களில் பெண்களின் எண்ணிக்கைதான் அதிகம். இந்தியாவைப் பொறுத்தவரை பெரும்பாலான உறுப்பு தான நன்கொடையாளர்கள் உயிர் வாழ்பவர்கள். மொத்த உறுப்பு தானத்தில் அவர்களின் பங்கு 93% எனும்போது, அதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் பெண்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

உறுப்பு தானம் வழங்கும் உயிர் வாழும் நன்கொடையாளர்களில் ஏறத்தாழ 80% அளவில் பெண்கள் இருக்கிறார்கள். அதாவது, உறுப்பு தானம் பெற்ற ஆண்கள் அதே அளவிலானவர்கள். உறுப்பு தானம் வழங்கிய பெண்களில் பெரும்பாலோர் மனைவியாகவோ, தாயாகவோ இருப்பவர்கள். அடுத்தபடியாக பெண் குழந்தைகளோ, சகோதரிகளோ இருக்கக் கூடும். பொருளாதார ரீதியிலான நிர்பந்தம் காரணமாக பெண்கள் தங்கள் குடும்பத்தில் ஆண் உறுப்பினர்களுக்கு உறுப்பு தானம் செய்கிறார்கள் என்று கருத இடமிருக்கிறது.

உலகில் மிகக் குறைந்த அளவில் உறுப்பு தானம் நடைபெறும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவின் தேவைக்கும், உறுப்பு தான நன்கொடைக்கும் இடையேயான இடைவெளி மிக மிக அதிகம். அமெரிக்கா போன்ற நாடுகளில் 10 லட்சம் பேருக்கு 40 உறுப்பு தான நன்கொடையாளர்கள் காணப்படுகிறார்கள் என்றால், இந்தியாவில் ஒருவர் என்கிற அளவில்கூட அந்த விகிதம் இல்லை.

ஒருகாலத்தில் ரத்த தானம் வழங்குவதற்குக்கூட அச்சப்பட்ட நிலை மாறி, இப்போது ரத்ததானம் வழங்குவதை பெரும்பாலோர் கடமையாகவும் பெருமையாகவும் கருதும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், உறுப்பு தானத்தில் அதுபோன்ற சமூக ரீதியிலான மனமாற்றம் இன்னும் ஏற்படவில்லை.

அரசு புள்ளிவிவரத்தின்படி கடந்த ஆண்டில் இந்தியாவில் 15,561 உறுப்பு மாற்று சிகிச்சைகள் நடந்திருக்கின்றன. 2013-இல் 4,990-ஆக இருந்த இந்த எண்ணிக்கை, ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது என்பது சற்று ஆறுதல். உறுப்பு மாற்று சிகிச்சையில் பெரும்பாலானவை சிறுநீரகம் தொடர்பானவை. 2022-இல் 11,423 சிறுநீரக மாற்று சிகிச்சைகள் நடந்திருக்கின்றன.

மாற்று சிகிச்சையின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்று மகிழ்ச்சி அடைந்துவிட முடியாது. ஆண்டுதோறும் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான சிறுநீரகச் செயலிழப்புகள் நடக்கும்போது, 11,423 மாற்று சிகிச்சைக்குத்தான் சிறுநீரக தானம் கிடைத்திருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். இதேநிலைதான் கல்லீரல், கணையம், இதயம் ஆகியவற்றின் மாற்று சிகிச்சையிலும் காணப்படுகிறது. கல்லீரல், கணையம், நுரையீரல், இதயம் உள்ளிட்ட பாதிப்புகளால் இந்தியாவில் ஆண்டுதோறும் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழக்கிறார்கள்.

தவறான புரிதல்களும் நம்பிக்கைகளும் போதுமான அளவு உறுப்பு தானம் இல்லாமல் இருப்பதற்குக் காரணங்கள். தங்களது உடல்நிலை பாதிக்கப்படும் என்கிற தவறான கருத்து பலரையும் சிறுநீரக, கல்லீரல் தானம் வழங்குவதில் தயக்கம் ஏற்படுத்துகிறது. விபத்தாலோ, மூளைச்சாவு காரணமாகவோ உயிரிழந்த உறவினர்களின் உறுப்புகளை தானம் செய்வதில்கூட புரிதலின்மை தடுக்கிறது.

இந்தப் பின்னணியில்தான் உறுப்பு மாற்று சிகிச்சைகளை ஊக்கப்படுத்த மத்திய அரசின் சுகாதார அமைச்சகம் சட்டங்களில் சில மாற்றங்களை ஏற்படுத்த முற்பட்டது. இதுவரை 65 வயதுக்கும் அதிகமானவர்களுக்கு உறுப்பு தானம் வழங்குவது தடை செய்யப்பட்டிருந்தது. ஆயுள்காலம் அதிகரித்துவிட்ட நிலையில், வயது வரம்பை அகற்ற முற்பட்டிருக்கிறது அரசின் சட்டத் திருத்தம். உறுப்பு தானத்துக்காக பதிவு செய்பவர்களில் 40% பேர் 65 வயதைக் கடந்தவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு இந்த மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

வாழும்போதும் சரி, மரணத்துக்குப் பிறகும் சரி உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது. கடந்த ஆண்டு உறுப்பு மாற்று சிகிச்சை நடத்தப்பட்டவர்கள் 15,561 பேர். தானம் கிடைத்த 12,796 உறுப்புகள் உறவினர்கள், நண்பர்கள் அல்லது அவர்களுடையதாகவே இருந்தன. உயிரிழப்புக்குப் பிறகு தங்களது உறுப்புகளை தானம் செய்தவர்கள் 2,765 பேர் மட்டுமே.

உறுப்பு மாற்று சிகிச்சையிலும் உறுப்பு தானத்திலும் இந்தியாவுக்கு முன்னுதாரணமாகத் தமிழகம் இருக்கிறது என்பது பெருமைப்படக்கூடிய செய்தி. உறுப்பு தானம் செய்தவர்களுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு என்கிற தமிழக அரசின் முடிவை ஏனைய மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது!

# தேசிய ஸ்குவாஷ்: வேலவன், அனாஹத் சாம்பியன்



**சென்னை, நவ. 23:** சென்னையில் நடைபெற்ற 79-ஆவது தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில், தமிழகத்தின் வேலவன் செந்தில்குமார், தில்லியின் அனாஹத் சிங் ஆகியோர் சாம்பியன் கோப்பையை வியாழக்கிழமை கைப்பற்றினர்.

ஆடவர் பிரிவு இறுதிச்சுற்றில் வேலவன் 12-10, 11-3, 12-10 என்ற கணக்கில் மற்றொரு தமிழக வீரரான அபய் சிங்கை வீழ்த்தி அசத்தினார். அதேபோல் மகளிர் பிரிவு இறுதிச்சுற்றில் அனாஹத் சிங் - சக தில்லி வீராங்கனையான தன்வி கன்னாவை எதிர்கொண்டார். இந்த ஆட்டம் 9-11, 11-4 என்ற கணக்கில் இருந்தபோது தன்வி காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகினார். இதையடுத்து அனாஹத் சாம்பியனாக அறிவிக்கப்பட்டார்.

# பிரிட்டன் விசா: இந்தியர்கள் முதலிடம்




**லண்டன், நவ.23:** பிரிட்டன் நுழைவு இசைவு (விசா) பெறும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது அந்நாட்டின் குடியேற்ற அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்ட புள்ளி விவரம் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரிட்டன் தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட 2023 செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் நிகழாண்டுக்கான இந்த புள்ளி விவர தரவுகளின்படி, திறன்மிக்க தொழிலாளர்களுக்கான நுழைவு இசைவு பிரிவில் மட்டுமின்றி, மருத்துவச் சேவை பணிக்கான நுழைவு இசைவு பிரிவிலும் இந்தியர்கள் முதலிடத்தில் இருப்பது தெரியவந்துள்ளது. அதில் மேலும் கூறியிருப்பதாவது:

இந்திய மருத்துவச் சேவை பணியாளர்களுக்கு பிரிட்டன் அளித்துள்ள நுழைவு இசைவு ஒப்புதலைப் பொருத்தவரை, முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2 மடங்குக்கு மேல் கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்த ஆண்டில் 38,866 மருத்துவச் சேவை பணியாளர்களுக்கு நுழைவு இசைவு அளிக்கப்பட்ட நிலையில், நிகழாண்டில் 1,43,990 பேருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த இடங்களில் நைஜீரியா, ஜிம்பாப்வே போன்ற நாடுகள் உள்ளன.

திறன் மிக்க தொழிலாளர்கள் நுழைவு இசைவு பிரிவைப் பொருத்தவரை, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்தியர்களுக்கு அளிக்கப்பட்ட நுழைவு இசைவு 11 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளது. இந்த பிரிவின் கீழ் முந்தைய ஆண்டில் இந்தியர்களுக்கு 20,360 நுழைவு இசைவுகள் வழங்கப்பட்ட நிலையில், நிகழாண்டில் 18,107 நுழைவு இசைவுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இருந்தபோதும், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்த நுழைவு இசைவுப் பிரிவிலும் இந்தியர்களே முன்னிலையில் உள்ளனர்.




கல்வி உதவித் தொகையுடன் கூடிய உயர்கல்வி நுழைவு இசைவு பிரிவைப் பொருத்தவரை நிகழாண்டில் 1,33,237 நுழைவு இசைவுகள் இந்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 5 சதவீதம், அதாவது 5,804 நுழைவு இசைவுகள் கூடுதலாகும். 2019-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 5 மடங்கு அதிகமாகும். இந்த பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மொத்த நுழைவு இசைவுகளில் இந்தியர்கள் மட்டும் 27 சதவீத பங்கை வகிக்கின்றனர்.

சுற்றுலா நுழைவு இசைவு பிரிவிலும் 27 சதவீதத்துடன் இந்தியர்கள் முன்னிலை வகிக்கின்றனர். இதற்கு அடுத்த இடங்களில் சீனா (19%), துர்கிஷ் (6%) நாடுகள் உள்ளன.

தன்னைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களை பிரிட்டனுக்கு அழைத்து வரும் நாட்டினரின் எண்ணிக்கையில் 43,445 நுழைவு இசைவுகளுடன் இந்தியர்கள் இரண்டாம் இடத்தில் உள்ளனர்.

இந்தப் பிரிவில் 60,506 நுழைவு இசைவுகளுடன் நைஜீரியா முதலிடத்தில் உள்ளது.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ‘காஸா ஒப்பந்தம் - உடனடி அமல் இல்லை’

**ஜெருசலேம், நவ. 23:** தங்களுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் இடையே பிணைக் கைதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அமலாக்கம் வெள்ளிக்கிழமைக்கு (நவ. 24) முன்னர் நிறைவேற்றப்படாது என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸாச்சி ஹனேக்பி வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஹமாஸ் அமைப்பினரால் கடத்திச் செல்லப்பட்ட அகதிகள் விடுவிக்கப்படுவது தொடர்பான தகவல் தொடர்புகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

இஸ்ரேலுக்கும், அந்த அமைப்பினருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில், பிணைக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

இருந்தாலும், அந்த நடவடிக்கை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தொடங்காது என்றார் அவர்.

முன்னதாக, அமெரிக்க மற்றும் இஸ்ரேல் அதிகாரிகளை மேற்கோள் காட்டி பல்வேறு ஊடகங்களும் கூறுகையில், இஸ்ரேல்-ஹமாஸ் ஒப்பந்தத்தின் கீழ் காஸாவில் 4 நாள் சண்டை நிறுத்தம் உடனடியாக மேற்கொள்ளப்படாது எனவும், வெள்ளிக்கிழமை வரை போர் தொடரும் எனவும் தெரிவித்தன.

இந்த நிலையில், போர் நிறுத்தம் மற்றும் பிணைக் கைதிகள் விடுவிப்பு தொடர்பாக இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு நாள் கடந்தும், காஸாவில் இஸ்ரேல் படையினர் கடுமையான குண்டுவீச்சில் வியாழக்கிழமை ஈடுபட்டனர். அந்தப் பகுதியில் ஹமாஸ் அமைப்பினருக்கும் அவர்களுக்கும் இடையே தீவிர சண்டை தொடர்ந்தது.

அரேபிய இனத்தவர்கள் பெரும்பான்மையாக வசித்து வந்த பாலஸ்தீனத்தில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் துன்புறுத்தலுக்குள்ளாகி வந்த யூதர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குடியேறினர்.

2-ஆம் உலகப் போர் காலத்தில் யூதர்களுக்கு எதிராக ஜெர்மனியின் நாஜிக்கள் நடத்திய மிகக் கொடூரமான இனப்படுகொலைக்குப் பிறகு பாலஸ்தீனத்தில் யூதர்கள் குடியேற்றம் வெகுவாக அதிகரித்தது.

அந்தப் பகுதியை ஆக்கிரமித்து யூதர்களுக்கான தனி தேசத்தை அமைக்க வேண்டுமென்று ஐரோப்பிய நாடுகளில் நீண்ட காலமாக செயல்பட்டு வந்த இயக்கம் (ஸியோனிஸம்) இந்த காலகட்டத்தில் தீவிரமடைந்தது.

இதனால் பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கும், அரேபியர்களுக்கும் இடையே மோதல்கள் அதிகரித்து வந்தது. இதற்கிடையில், அந்தப் பகுதியில் யூதர்களுக்கான 'இஸ்ரேல்' நாடு உருவானதாக

**தொடர்கிறது சண்டை**



காஸா சிட்டிக்குள் முன்னேறிச் செல்லும் இஸ்ரேல் ராணுவ வாகனங்கள்.

கடந்த 1948-இல் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனை ஏற்காத அரபு நாடுகள் இஸ்ரேல் மீது பல முறை படையெடுத்தன. இருந்தாலும் அந்தப் போர்களில் வெற்றிவாகை சூடிய இஸ்ரேல், தனது நிலப்பரப்பை மேலும் விரிவுபடுத்தியது.

இறுதியில் மேற்குக் கரை பகுதியும், காஸா பகுதியும் மட்டுமே தற்போது பாலஸ்தீனர்களின் வசம் எஞ்சியது.

இதில் காஸா பகுதியில் ஆட்சி செலுத்தி வரும் ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேலுடன் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சூழலில், காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது சுமார் 5,000 ஏவுகணைகளை சரமாரியாக வீசி கடந்த மாதம் 7-ஆம் தேதி தாக்குதல் நடத்தி அந்த அமைப்பினர், இஸ்ரேலுக்குள் அதிரடியாக ஊடுருவி சுமார் 1,200 பேரை படுகொலை செய்தனர். இதில் மிகப் பெரும்பான்மையானவர்கள் பொதுமக்கள்.

அத்துடன், 200-க்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், ராணுவத்தினரை ஹமாஸ் அமைப்பினர் காஸாவுக்குள் கடத்திச் சென்றனர்.

இந்த கொடூரத் தாக்குதலைத் தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட இஸ்ரேல் அரசு சூளுரைத்தது. அதற்காக காஸா பகுதியை முற்றுகையிட்டு மிகக் கடுமையாக குண்டு வீச்சு நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம், தரைவழியாகவும் அந்தப் பகுதிக்குள் நுழைந்து தாக்குல் நடத்தி வருகிறது.

இதற்கிடையே, பிணைக் கைதிகளை விடுவிப்பதற்காக சர்வதேச நாடுகளின் உதவியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. இதில், சில பிணைக் கைதிகளை மட்டும் விடுவிக்கப்பட்டனர்.

எனினும், காஸாவில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதால் இந்தப் பேச்சுவார்த்தையில் இழுபறி நீடித்து வந்தது.

இந்த நிலையில், கத்தார் தலைமையில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டு, இரு தரப்பிலும் புதன்கிழமை உடன்பாடு ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில், 4 நாள்களுக்கு சண்டை நிறுத்தம் மேற்கொள்ள இஸ்ரேலும், ஹமாஸ் அமைப்பும் ஒப்புக் கொண்டன.

முதல் கட்டமாக 50 பிணைக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் சம்மதித்தது.

எனினும், இந்த ஒப்பந்தம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அமலுக்கு வராது என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா தாக்குதல்

**பெய்ரூட், நவ.23:** லெபனானில் செயல்படும் ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவினர் இஸ்ரேல் மீது 50-க்கும் மேற்பட்ட ராக்கெட் குண்டுகளை வியாழக்கிழமை வீசி தாக்குதல் நடத்தினர். முன்னதாக, இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் தெற்கு லெபனானில் 5 ஹிஸ்புல்லா அமைப்பினர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேலுக்குள் ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய மிகப் பெரிய தாக்குதலாக இது கருதப்படுகிறது. இதனால் லெபனான் எல்லையிலும் பதற்றம் அதிகரித்துள்ளது.

# ‘உளவு செயற்கைக்கோள்: வட கொரியாவுக்கு ரஷியா உதவி’



**சியோல், நவ. 23:** தங்களது உளவு செயற்கைக் கோளை வட கொரியா வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தியதற்கு ரஷியா உதவியிருக்கலாம் என்று தென் கொரிய உளவு அமைப்பினர் கூறியுள்ளனர்.

இது குறித்து அந்த நாட்டு எம்.பி.க்களிடம் அவர்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: உளவு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் முயற்சியில் ஏற்கெனவே 2 முறை தோல்வியடைந்த வட கொரியா, அந்த முயற்சியில் புதன்கிழமை வெற்றியடைந்ததற்கு ரஷியா அளித்த தொழில்நுட்ப உதவி காரணமாக இருக்கலாம். அந்த செயற்கைக்கோளை செலுத்துவதற்கான 'சோலிமா-1' ராக்கெட்டில் இருந்த தொழில்நுட்பக் குறைபாட்டை சரிசெய்ய ரஷியா உதவியிருக்கலாம்.

வட கொரியாவின் விண்வெளி திட்டங்களுக்கு உதவப் போவதாக ரஷிய அதிபர் புதின் ஏற்கெனவே தெரிவித்துள்ளார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.